DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | கவிப்பெருமாள் | Village | கேத்தாண்டப்பட்டி |
| Father's Name | முனிசாமி | Taluk | வாணியம்பாடி |
| Age | 46 | Calling | சூப்பர்வைசர் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **13.02.2026**

**O.S. No.53 /2023** **வா.சா.2** **11.44 AM – 11.55 AM**

**முதல் விசாரணை –**

இவ்வழக்கில் நான் 2–வது வாதி ஆவேன். எனது தரப்பில் 2–வது சாட்சியாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். படிக்க கேட்டேன் நான் சொன்னபடி இருந்தது. அதன் பின்னர் அதில் கையொப்பம் இட்டேன்.

**குறுக்கு விசாரணை–( 4 முதல் 6ம் பிரதிவாதிகள் தரப்பு)–**

1. என் தந்தை முனிசாமி என்பவருக்கு எத்தனை மனைவிகள் என்றால் 2 மனைவிகள். என் தந்தையாரின் முதல் மனைவி அமிர்தா என்பவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் யாரும் இல்லை. மேற்படி இறந்து போன அமிர்தா என்பவரின் இறப்பு சான்றிதழோ அல்லது கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து விசாரணை சான்றோ எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. என்னுடைய தந்தையின் பெற்றோர்களின் இறப்பு சான்றிதழோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்கின் 1ம் பிரதிவாதி என்ன உறவு முறை என்றால் என் உடன் பிறந்த அண்ணன் கோவிந்தசாமியின் மனைவி ஆவார். இறந்து போன என் தந்தையாருக்கு என்னுடைய அம்மா 1ம் வாதிக்கும் பிறந்த குழந்தைகள் 2 முதல் 4ம் வாதிகள் என்றால் சரிதான். மேற்படி என் தந்தையாரின் இதர வாரிசுகள் எவரேனும் விட்டு விட்டு இந்த

வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதற்காக வாரிசு சான்றிதழ் தேவைப்படுகிறது என்றால் பாகம் பிரிக்க தேவைப்படுகிறது.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

***(1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. )***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாணியம்பாடி.